# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 07 - நேரம்:30 நிமிடம்

## வினாப்பத்திரம் : மாரி போல

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** அறு குளத்து உகுத்தும், அகல் வயல் பொழிந்தும்,
உறுமிடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்,
வரையா மரபின் மாரி போலக்,
கடாஅ யானைக் கழல் கால் பேகன்
கொடை மடம் படுதல் அல்லது,
படை மடம் படான், பிறர் படை மயக்குறினே.

**வினாத்தொகுதி:01**

(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- அறுகுளம்
- கடாஅ யானை
- வரையா
- மயக்குதல்

(iii) இப்பாடலில் வெளிப்படம் பேகமன்னனின் குணவியல்புகளை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

**வினாத்தொகுதி:02**

(i) இப்பாடல் பாடப்பட்ட பின்னணியை குறிப்பிடுக.

(ii) இப்பாலில் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயங்கள் யாவை?விளக்குக.

(iii) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.?

(12 புள்ளிகள்)

**வினாத்தொகுதி:03**

(i) இப்பாடலில் கொடைமடம்படுதல் என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) பாடப்பட்ட பேகன் மன்னனின் கொடைச்சிறப்பு இப்பாடலில் எவ்வாறு துலக்கம் பெறுகின்றது?

(iii) பாடலில் கையாளப்பட்ட உவமை அணியின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

**வினாத்தொகுதி:04**

(i) இப்பாடலில் படை மடம் படுதல் என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) ''வரையா மரபின் மாரி போலக்...பேகன்'' எனும் தொடர் ஊடாக வெளிப்படுத்தப்படும் செய்தியைக் குறிப்பிடுக.

(iii) பாடல் வெளிப்படுத்தும் புறத்திணைப் பண்புகளைக் குறிப்பிடுக.

(12 புள்ளிகள்)